*3*

# தேவை: மேய்ப்பனின் இருதயங்கள்

## (எசேக்கியேல் 34:1-6)

*அநேக ஆண்டுகளுக்கு முன்பாக, யாரோ ஒருவர் எனக்கும் என் மனைவிக்கும் துருக்கி மற்றும் கிரேக்க நாடுகளுக்குச் சுற்றுலாச் செல்ல எங்களுக்கு பணம் கொடுத்திருந்தார். நாங்கள் அந்தப் பயணத்தில் இருக்கையில், பயணித்துக் கொண்டிருந்த ஒரு மனுஷன் இன்னொரு மனுஷனைப் பார்த்துக் கேட்டார், "இரவு உணவில் நாம் சாப்பிட்ட இறைச்சி என்ன இறைச்சி" என்று கேட்டார். அதற்கு அடுத்தவர், "எனக்குத் தெரியவில்லை, ஆனால் அது மோ-ச மா-ன-து அல்ல" என்றார். எங்கள் பயணத்தின்போது நாங்கள் கொஞ்சம் மீன், கொஞ்சம் கோழி, கொஞ்சம் மாட்டுக்கறி, ஆனால் அதிகமாக ஆட்டுக்கறி சாப்பிட்டோம். அந்த நாடுகளில் ஜனங்கள் அதிகமாக செம்மறியாடுகளைத்தான் வளர்க்கிறார்கள். வேதாகம காலங்களில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் ஆடுகளைத்தான் வளர்த்தார்கள் என்பது உண்மை. சாலொமோனின் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்ட போது, 120,000 செம்மரியாடுகள் பலி செலுத்தப்பட்டன (2 நாளாகமம் 7:5). எனவே ஆடு மற்றும் ஆடு சம்பந்தப்பட்ட காரியங்களும் வசனங்களில் பிரசித்தமாய் பேசப்படுவது இயல்புதான்.*

*ஆடுகளைக் குறித்து வேதத்தில் பேசப்படும் வசனங்கள் எத்தனை எனும் ஆராய்ச்சியில் இறங்கினேன். 187 முறை ஆடுகளையும், 191 முறை மந்தைகளையும், 83 முறை ஆட்டு மேய்ப்பர்களைக் குறித்தும் - மொத்தம் 461 முறை KJV குறிப்புகளில் - பயன்படுத்தப்பட்டுள்ளது. இவைகளில் ஆடுகளைப் போஷிப்பதையும் ஆடுகளைப் பராமரிப்பதைக் குறித்தும் பேசப்படும் வசனங்கள் சேர்க்கப்படவில்லை. வேதாகம எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் ஆடுகளையும் மேய்ப்பர்களையும் உருவகப்படுத்தியுள்ளனர் ஏனெனில் ஜனங்கள் அவைகளைத்தான் புரிந்து கொள்ள முடிந்தது. இது டெக்ஸாஸில் கால் நடைகளை பயன்படுத்தி பேசுவதோடு ஒப்பிடலாம். டெக்ஸாஸில் வாழும் அநேக மக்களுக்கு கால்நடைகளைக் குறித்த அடிப்படை புரிந்து கொள்ளுதல் இருக்கிறது.*

*இருப்பினும், வேதாகம உதாரணங்களில் ஆடுகளை அடிக்கடி பயன்படுத்துவதற்கு மற்றோரு காரணமும் உண்டு - அது ஆட்டின் இயல்பு. ஆடுகளின் குணாதிசயங்களை சாரம்ஸமாக குறிப்பிட ஆங்கில எழுத்தான "W's". எனும் எழுத்தில் துவங்கும் மூன்று வார்த்தைகள் குறிப்பிடுகின்றன என்று சொல்லப்படுவதைக் கேட்டிருக்கிறேன். முதல் இரண்டும் எதிர் மறை, மூன்றாவது நேர்மறை.*

- *Weak.* ஆடுகள் பாதுகாப்பற்றவைகளாக உள்ளன. காட்டாடுகள் பாறை இடுக்குகளில் போய் ஒளிந்துக் கொள்ளக் கூடும், ஆனால் மனித வளர்ப்பு ஆடுகளுக்கு இயற்கை பாதுகாப்பு இல்லை. அவைகளால் வேகமாக ஓடவும் இயலாது. அவைகளுக்கு தாக்கக்கூடிய குளம்புகளும் அல்லது கொம்புகளும் இல்லை. அவைகள் காட்டு மிருகங்களுக்கு மிக எளிதாகக் கிடைக்கும் வேட்டை உணவுகள் (ஏசாயா 13:14; 1 சாமுவேல் 17:34). *ஆடுகள் பாதுகாக்கப்பட வேண்டியவை* (காண்க மீகா 5:8).
- *Wanderers.* ஆடுகள் நோக்கத்தோடு சுற்றித் திரிவதில்லை - ஒருமுறை அப்படி திசை மாறிப்போய்விடுமானால், பெரும்பாலும் அவைகள் திரும்பிவர வழி அறியாது (காண்க ஏசாயா 53:6; சங்கீதம் 119:176). ஒரு குதிரையோ அல்லது மாடோ தனது வீட்டை கண்டுபிடித்து விடும், ஆனால் ஆடுகளால் முடியாது. ஆடுகள் வழிகாட்டப்பட வேண்டியவை.
- *Worthwhile.* அநேக ஜனங்களின் வாழ்வாதாரம் அதிகமாக ஆடுகளையே நம்பியிருந்தது. ஆடுகள் ஆடைகளுக்கான கம்பளி நூலைக் கொடுக்கிறது (யோபு 31:20) மற்றும் சாப்பிட உணவாக பயன்படுகிறது. தாய்ஆடு தொடர்ந்து குட்டிகளை ஈன்று கொண்டிருந்தது. ஒரு மனிதனுடைய சொத்து அவன் எத்தனை ஆடுகளை வைத்துள்ளான் என்பதைப் பொறுத்தே அளவிடப்பட்டது. உதாரணமாக யோபு 14,000 ஆடுகளைக் கொண்டிருந்தான் (யோபு 42:12).

ஆடுகளையும் மேய்ப்பர்களையும் குறித்த வேத வாக்கிய போதனைகளைப் பார்ப்போம். குறிப்பிட்ட சில கோட்பாடுகளை நிலைநிறுத்த பழைய ஏற்பாட்டு ஆராய்ச்சியுடன் நாம் துவங்குவோம்.

## ஆடு மற்றும் மேய்ப்பர்களைக் குறித்த பழைய ஏற்பாட்டுப் போதனை

**பிரதான மேய்ப்பனும் "அவருக்குக் கீழான மேய்ப்பர்களும்"**

பழைய ஏற்பாட்டில், தேவன் பிரதான மேய்ப்பராக காட்டப்படுகிறார். அவருடைய ஜனங்கள் அவருடைய மந்தையாக காட்டப்படுகிறார்கள். சங்கீதம் 80:1ல் தேவன் "இஸ்ரவேலின் மேய்ப்பனானவர்" என்று குறிப்பிடப்படுகிறார். இது போல தேவனைக்குறிப்பிட அநேக சங்கீதங்களில் இந்தப் பதம் பயன்படுத்தப்படுகிறது (சங்கீதம் 78:52; 79:13; 95:7; 100:3). மிக நன்றாக அறிந்த பகுதி சங்கீதம் 23, அது "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" என்று துவங்குகிறது (வசனம் 1). எழுச்சியூட்டும் மற்றொரு வசனம் ஏசாயா 40: "மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (வசனம் 11).[1]

தேவன் தமக்குக் "கீழான மேய்ப்பர்களையும்" நியமித்திருக்கிறார்: அவரது மந்தையை போஷித்து, பராமரித்து, காத்துக் கொள்கிற மனுஷர்களை நியமித்திருக்கிறார். இந்தக் கடமையை, முதலில் ஆசாரியர்களுக்கும் தீர்க்க தரிசிகளுக்கும் கொடுக்கப்பட்டதாக நாம் நினைக்கலாம்; ஆனால் இராஜாக்களும் வேறு சில தலைமைப் பொறுப்பு வகித்தவர்களும் கூட மேய்ப்பர்கள்

எனப்பட்டனர். ஏசாயா 63:11ல் தேவனுடைய ஜனங்களின் மேய்ப்பரோடு மோசேயும் இணைக்கப்பட்டிருந்தார். தாவீது ராஜா அவருடைய பிரஜைகளை தமது மந்தையாக பாவித்தார் (2 சாமுவேல் 24:17; 1 நாளாகமம் 21:17). தேவன் அந்நியநாட்டு ராஜாவாகிய, கோரேஸையும் தமது மேய்ப்பனாகக் குறிப்பிட்டார் (ஏசாயா 44:28). மற்ற ஜனங்கள் மீது பொறுப்பேற்கும் பதவியளிக்கப்பட்ட ஒருவன், மேய்ப்பானாகக் கருதப்பட்டான்.

### மேய்ப்பனில்லாத ஆடுகள்

ஆடுகள் பெலவீனமுள்ளவைகளும் பாதுகாப்பற்றவைகளுமாயிருக்கிறபடியால், மேய்ப்பனில்லாத ஆடுகள் போஷிக்கப்படாமலும், பாதுகாக்கப்படாமலும், பரிதபிக்கப்படத்தக்க வகையில் விடப்படலாம். ஜனங்கள் சரியான தலைமைத்துவத்தைக் கொண்டிராத போது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருப்பார்கள். மோசேயின் வலது கரமாக யோசுவா நியமிக்கப்பட்டான், அதினால் “ஜனங்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளாக விடப்படமாட்டார்கள்'' (எண்ணாகமம் 27:17). ஆகாப் ராஜாவின் மரணம் பின்வரும் வார்த்தைகளால் தீர்க்க தரிசனமாக சொல்லப்பட்டது: “இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல, மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன்” (1 இராஜாக்கள் 22:17ஆ; காண்க 2 நாளாகமம் 18:15, 16).

பழைய ஏற்பாட்டில் அதிகப்பட்சமானது தேவனுக்குக்கீழான மேய்ப்பர்களின் தோல்வியையே கொண்டிருந்தது என்பது வருந்தத்தக்கது. எரேமியா எழுதினார்,

> “என் ஜனங்கள் காணமற்போன ஆடுகள், அவர்களுடைய மேய்ப்பர்கள் அவர்களைச் சிதறப்பண்ணி, ... அலய விட்டார்கள்'' (எரேமியா 50:6அ).

> மேய்ப்பர்கள் மிருககுணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடாமற் போனார்கள்; ஆகையால், அவர்கள் காரியம் வாய்க்காமற்போய், அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது (எரேமியா 10:21).[2]

மோசமான தலைமைத்துவத்தால், ஆடுகள் கவனிக்கப்படாமல் பாதுகாப்பு இல்லாமல் போயின. அவைகள் சிதறடிக்கப்பட்டு விலங்குகளைப்பட்சிக்கிறவைகளுக்கு இலகுவான இரையாகிப் போயின.

> ... கர்த்தருடைய மந்தை சிறைபட்டுப் போனது ... (எரேமியா 13:17).

> “இஸ்ரவேல் சிதறிப்போன ஆடு” (எரேமியா 50:17அ).

> ... ஜனங்கள் ஆடுகளைப்போலச் சிதறி, மேய்ப்பனில்லாததினால் சிறுமைப்பட்டார்கள் (சகரியா 10:2).

தேவன் இதைப்பற்றி எப்படி உணர்ந்தார்? (இவைகள் *அவருடைய* ஆடுகள் என்பதை மனதில் வையுங்கள்.) எரேமியா 13:20ஆ வில் அவருக்குக் கீழான - மேய்ப்பர்களிடம் ஒரு ஆராயும்படியான கேள்விகேட்கப்பட்டது: “உனக்குக் கொடுக்கப்பட்டிருந்த மந்தையும், உன் மகிமையான ஆட்டுக்கிடையும் எங்கே?”

*கீழான - மேய்ப்பர்கள் அவருடைய மந்தையை புறக்கணித்தபோது, தேவன் அவர்களைக் கடினமாய்க் கடிந்துகொண்டார்:*

> *“என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரேமியா 23:1).*
>
> *“மேய்ப்பருக்கு விரோதமாக என் கோபம் மூண்டது ...” (சகரியா 10:3).*[3]

*பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளில் ஒன்று கீழான மேய்ப்பர்கள் தங்கள் கடமையைச் செய்யத்தவறினபடியால் ஒரு அதிரடியான வசனமாக எசேக்கியேல் 34 பேசுகிறது:*

> *கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: “மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத்தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: “கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்லுகிறார்; தங்களையே மேய்க்கிற ‘இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்க வேண்டும். நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு, ஆட்டுமயிரை உடுப்பாக்கிக் கொள்ளுகிறீர்கள்; கொழுத்ததை அடிக்கிறீர்கள்; மந்தையையோ மேய்க்காமல் போகிறீர்கள். நீங்கள் பலவீனமானவைகளை பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும், காணமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள். மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டு போயின. சிதறுண்டு போனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. என் ஆடுகள் சகல மலைகளிலும் உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு, பூமியின் மீதெங்கும் என் ஆடுகள் சிதறித்திரிகிறது; விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை” ’ ” (வசனங்கள் 1-6).*

*இந்தப் வசனப்பகுதி மேய்ப்பர்களின் கடமைகளைக் குறிப்பிடுகிறது. மேய்ப்பர்கள் ஆடுகளைப் போஷித்து, வியாதிப்பட்டவைகளுக்கும் காயம் பட்டவைகளுக்கும் உதவி செய்ய வேண்டும். காணமல் போனவைகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் மந்தையைப் பாதுகாக்க வேண்டும். எப்படியிருப்பினும், எசேக்கியேலினால் விவரிக்கப்பட்ட ஆவிக்குரிய மேய்ப்பர்கள் தங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றவில்லை. அதன் விளைவு வசனம் 8ல் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது: “மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின.” வசனம் 9 மற்றும் 10 தங்கள் வேலையைச் செய்யாத கீழான - மேய்ப்பர்களின் முடிவைப் பற்றிப் பேசுகிறது:*

> *“ஆகையால், மேய்ப்பரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்: ‘கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார், “இதோ, நான் மேய்ப்பருக்கு விரோதமாக வந்து, என் ஆடுகளை அவர்கள் கையிலே கேட்டு, மேய்ப்பர் இனித் தங்களையே மேய்க்காதபடி, மந்தையை மேய்க்கும் தொழிலை*

*விட்டு அவர்களை விலக்கி, என் ஆடுகள் அவர்களுக்கு ஆகாரமாயிராதபடி, அவைகளை அவர்கள் வாய்க்குத் தப்பப் பண்ணுவேன் என்று சொல்லு." ' "*

தொடர்ந்து வரும் வசனங்களில். தேவன் தமது மந்தைக்காக கவனம் செலுத்துவார் என்று சொல்லுகிறார்; கீழான - மேய்ப்பர்கள் செய்யாதிருந்தவைகள் அனைத்தையும் அவர் செய்வார். இது பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி ஜனங்கள் வருவதையும் புதிய தலைமைத்துவம் நெகேமியா தேசாதிபதியாகவும் எஸ்றா ஆவிக்குரிய தலைவனாகவும் நியமிக்கப்படுவதையும் குறிப்பிடுவதாகக் காணுகிறது. இந்த வசனப்பகுதி, நல்ல மேய்ப்பனாகிய இயேசு வருவதையும் முன்னோக்கி இருந்தது. வசனங்கள் 24 மற்றும் 25ல் நாம் வாசிக்கிறோம், "கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாக இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன். நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கைசெய்து, துஷ்ட மிருகங்களை தேசத்தில் இராதபடிக்கு ஒழியப் பண்ணுவேன், அவர்கள் சுகமாய் வனாந்தரத்தில் தாபரித்து காடுகளில் நித்திரைபண்ணுவார்கள் ... ."

பழைய ஏற்பாடு முடிவிற்கு வரும்போது ஆட்டைப்பற்றியும் மேய்ப்பனைப் பற்றியுமான கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. தீர்க்கதரிசிகள், மந்தையில் மீதியாயிருப்பவர்கள் மறுபடியும் மந்தையில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று முன்னுரைத்தார்கள் (மீகா 2:12; எரேமியா 23:3) மற்றும் புதிய மேய்ப்பர்கள் நியமிக்கப்படுவார்கள் - அவர்கள் ஆடுகளை மேய்க்கத் தக்கவர்களாயிருப்பார்கள் (எரேமியா 23:4). இது சம்பந்தமாக எரேமியா 3:15 கவனிக்கப்படத்தக்கது: "உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்."

## ஆடுகள் மற்றும் மேய்ப்பர்களைக் குறித்து புதிய ஏற்பாட்டுப் போதனை

**நல்ல மேய்ப்பன்**

வருகிறவராயிருந்த நல்ல மேய்ப்பனாகிய கிறிஸ்துவைக் குறித்த போதனையில் பழைய ஏற்பாட்டுக்கும் பங்குண்டு. புதிய ஏற்பாட்டினூடே, இயேசு கிறிஸ்து ஆட்டு மேய்ப்பன் எனும் பதங்களில் பேசப்படுகிறார். உதாரணமாக, மத்தேயு 2:4ல் மேசியா (கிறிஸ்து) எங்கே பிறப்பார் என்று ஏரோது கேட்டான். யூதமத போதகர்கள் பதிலளித்து, "யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே," என்றனர், பிறகு மீகா 5:2, ஐ மேற்கோள் காட்டினர், அதில் பெத்லகேமிலிருந்து "என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளப்போகிற மேய்ப்பர்"[4] வருவார் என்று சொல்லுகிறது (வசனங்கள் 5, 6).

"இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" இயேசு வந்தார் (லூக்கா 19:10). இவர்களுக்குள்ளாக "காணாமல்போன இஸ்ரவேல் வீட்டாரும்" இருந்தார்கள் (மத்தேயு 10:6). அவர் ஜனங்களுக்காக மனதுருகினார், ஏனெனில் அவர்கள் "மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல்" இருந்தார்கள் (மத்தேயு 9:36; காண்க மாற்கு 6:34). அவருடைய உவமைகளில் ஒன்று மேய்ப்பன் காணாமல்

*போன ஒரு ஆட்டைத்தேடி கண்டுபிடித்து மந்தையோடு சேர்த்தான் என்பது (லூக்கா 15:3-7; காண்க மத்தேயு 18:12-14). இயேசு, தம்முடைய சீஷர்களிடத்தில் சொன்னார், "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்" (மத்தேயு 10:16அ). அவர் மேலும் சொன்னார், "சிறுமந்தையே பயப்படாதே" (லூக்கா 12:32அ).[5]*

*இயேசுவின் பணிப்பொறுப்பு மேய்ப்பர் என்பதை மிக அதிகமாக படம் பிடித்துக் காட்டும் பரந்த வசனப்பகுதி யோவான் 10. இங்கே அந்த பெரிய அதிகாரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளது:*

> *"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல் வழியாய் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளை பேர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான்; ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது" (வசனங்கள் 1-4).*
>
> *"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் ... . பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும்[6] எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டு வரவேண்டும்; அவைகள் என் சத்தத்துக்கு செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (வசனங்கள் 11-16).*
>
> *"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது" (வசனம் 27).*

*இந்தப் பாடங்களில் இந்த வசனப்பகுதியின் மூலம் ஒரு உண்மையான மேய்ப்பனின் சுயநலமற்ற தன்மையை கற்றுக்கொள்ளக் கூடும். "கூலியாளாக" இருக்கும் ஒருவன் தன்னைப்பற்றி மட்டுமே நினைக்கிறான், உண்மையான மேய்ப்பனோ ஆடுகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளான்.*

*புதிய ஏற்பாடு முழுவதிலும் இயேசு நமது மேய்ப்பனாக இருக்கிறார் என்ற கருத்து தொடர்கிறது. அவர் "ஆடுகளின் பிரதான மேய்ப்பராயிருக்கிறார்" (எபிரெயர் 13:20). பேதுரு குறிப்பிடுகையில் அவர், "ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர்" என்று சொல்கிறார் (1 பேதுரு 2:25).[7] பழைய ஏற்பாட்டில் தாவீது சொன்னது போல, "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்" என்று நாமும் சொல்லலாம் (சங்கீதம் 23:1).*

*“கீழான - மேய்ப்பர்கள்”*

*பழைய ஏற்பாட்டில், தேவன் தமக்குக் “கீழான - மேய்ப்பர்களை”க் கொண்டிருந்தார்: அவர்கள் அவருடைய மந்தைக்கென நியமிக்கப்பட்டவர்கள், தமது பெரியதான பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைத்தார், அவர்களிடம் அவர் கணக்குக் கேட்டார். இயேசுவுக்குக் “கீழாகவும் - மேய்ப்பர்கள் இருக்கின்றனர்.” உள்ளூர் சபைகளில், இவர்கள் “மூப்பர்கள்” என்றும், “கண்காணிகள்” என்றும் (“பிஷப்புகள்”; KJV), “மேய்ப்பர்கள்” (“பாஸ்டர்கள்”) என்றும் அழைக்கப்பட்டனர். இந்தத் தலைவர்களைக் குறித்து மூன்று திறவுகோல் வசனப்பகுதிகளைக் காண்போம்.*

*முதல் வசனப்பகுதி நடபடிகள் 20ல் காணப்படுகிறது. பவுல் எருசலேமுக்குப் போகிற வழியில் மிலேத்துவில் தரையிறங்கினார். வசனம் 17ல் சொல்லப்படுகிறது, “மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான்.” மூப்பர்கள் வந்தபோது, பவுல் அவர்களிடம் ஒரு நீண்ட உரையை ஆற்றினார் (வசனங்கள் 18-35). அதில் எபேசுவில் இருந்த சபைக்கு அவர்களின் பொறுப்பைப் பற்றிய வார்த்தைகளும் இடம் பெற்றிருந்தன. பவுல் சொன்னார், “ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப்[8] பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்” (வசனம் 28). எபேசுவில் இருந்த உள்ளூர் சபையின் தலைவர்கள் முதலில் “மூப்பர்கள்” என்று அழைக்கப்பட்டனர் என்பதைக் கவனியுங்கள், “முதிர்வயதுடையவர்கள்” என்பது இதன் பொருள். பிறகு பவுல், பரிசுத்த ஆவி மூப்பர்களை “கண்காணிகளாக” (“பிஷப்புக்களாக”; KJV) வைத்தார் என்றும் சொன்னார்; இறுதியாக, அவர்கள் மந்தையின் “மேய்ப்பர்களாக” இருக்க வேண்டும் என்று (பாய்மன் எனும் வினைச்சொல்) கூறப்பட்டனர். எனவே மூப்பர்கள் கீழ்வரும் முறையில் குணாதிசயங்களைப் பெற்றிருக்க வேண்டும்:*

- *<u>பூரணப்பட்ட</u> மனுஷனாயிருக்க வேண்டும் (maturity) - “மூப்பர்” என்பதன் பொருள் இதுவே.*
- *<u>நிர்வாகத்திறமையுள்ள</u> மனுஷர்களாயிருக்க வேண்டும் (management) - “கண்காணி” என்று குறிப்பிடப்பட்டதன் பொருள் இதுவே.*
- *எல்லாவற்றுக்கும் மேலாக, <u>ஊழியம் செய்யும்</u> (mission) மனுஷர்களாயிருக்க வேண்டும் - “மேய்ப்பர்” என்று சுட்டிக் காட்டப்பட்டதன் பொருள் இதுவே. மூப்பர்கள் தங்களுடைய ஊழியத்தையும் நோக்கங்களையும் புரிந்து கொண்டிருப்பது அவசியம்.*

*ஒரு மேய்ப்பனுக்கு எவ்வளவு பெரிய பொறுப்புள்ளது! எபேசு பட்டணத்து சபையின் மூப்பர்களை சவால் விட்டு பேசின பவுலின் மனதில் இருந்த மிக உச்சக்கட்ட பொறுப்புக்கள் மந்தையை பராமரிப்பதுதான்:*

> *நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப்*

போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப்புத்தி சொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள் (நடபடிகள் 20:29-31).

நாம் ஆராய்வதற்கான இரண்டாவது வசனப்பகுதி எபேசியர் 4:11, 12: "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி யடைவதற்காகவும், அவர் (தேவன்) சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்." இந்த வசனப்பகுதியில் பவுல் வித்தியாசப்பட்ட "அலுவல்கள்" சபையில் ஏற்படுத்தப்பட்டதாக வரிசைப்படுத்துகிறார் - சில அலுவல்கள் (அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் போன்றவை) தற்காலிகமானவைகளாயும், சில அலுவல்கள் (சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் போன்றவை) நிரந்தரப் பணிகளாகவும் ஏற்படுத்தப்பட்டது. "மேய்ப்பர்" எனும் பதம் என்பது *பாய்மென்* எனும் வார்த்தையிலிருந்து வந்தது, இது "மூப்பர்களை" "மேய்ப்பர்களாகக்" குறிப்பிடும் வார்த்தை. தேவன் ஏன் இந்தத் கடமைப்பணிகளை ஏற்படுத்தினார் என்பதைக் கவனியுங்கள் (இது மூப்பர்களையும் உட்படுத்தியது): "பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடையும்படியாகவும்.'' சபையின் பக்திவிருத்தியே வலியுறுத்தப்பட்டது. மேய்ப்பர்கள் மந்தையைப் போஷித்து ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும், அவைகளுக்காக கவனம் செலுத்தி, பாதுகாத்திட வேண்டும். ஆரோக்கியமான ஒரு மந்தை தாமாகவே பலுகிப் பெருகும்.

மூன்றாவது வசனப்பகுதி 1 பேதுரு 5:1-4:

> உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும் கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் *மேய்த்து*, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், *கண்காணிப்புச் செய்யுங்கள்*. அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது, மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (வலியுறுத்தல் என்னுடையது).

இந்த வசனப்பகுதி ஆங்கில எழுத்தான "R's" என்பதை "மூப்பர்களின் பணிகளைக்" குறிக்க மூன்று வார்த்தைகளின் முன் எழுத்தாக பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்போம்:

- மூப்பர்களின் கடமை (*Role*). மூப்பர்களைக் குறிக்கும் மூன்று பதங்களும் ("மூப்பர்கள்," "மேய்ப்பர்கள்," "கண்காணிகள்") மாறி மாறி இந்த வசனப்பகுதியில் பயன்பட்டிருப்பதைக் காண்கிறோம். "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை" பராமரிப்பது

வலியுறுத்தப்படுகிறது.

- மூப்பர்களின் *பொறுப்பு* (*Responsibility*). (1) மூப்பர்கள் சரியான *ஊழியத்தைக்* கொண்டிருக்க வேண்டும், அது தான் மந்தையை மேய்த்தல். மேய்த்தல் என்பது வழிநடத்துதலையும், வளர்க்குதலையும், பாதுகாப்பதையும் செயல்படுத்துவதைக் கொண்டது. எபிரெயர் எழுத்தாளர் சபையின் தலைவர்களைக் குறித்துப் பேசுகையில், அவர் "உங்கள் ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணுகிறவர்கள்" என்று சொன்னார் (எபிரெயர் 13:17). அவர்களுடைய தலையாயப் பொறுப்பு கட்டிடத்தைக் கண்காணித்துக் கொள்வது அல்லது சொத்துக்களைப் பராமரிப்பதுமல்ல, ஆத்துமாக்களைக் கண்காணிப்பதுதான். (2) மூப்பர்கள் சரியான *செயல் தூண்டுதல் உணர்வுள்ளவர்களாயிருக்க* வேண்டும்: அவர்கள் "மனமுவந்து" "ஆர்வத்துடன்" ஊழியஞ்செய்ய வேண்டும். (3) மூப்பர்கள் சரியான போக்கு உடையவர்களாயிருக்க வேண்டும்: அவர்களின் பொறுப்பில் இருப்பவர்களிடத்தில் "அதிகார ஆளுகை பண்ணுகிறவர்களாயிராமல்," மந்தைக்கு மாதிரியாக விளங்க வேண்டும்.
- மூப்பர்களின் *பிரதிபலன்* (*Reward*): "வாடாத மகிமையின் கிரீடம்." "கிரீடம்" என்பது *stephanos,* என்னும் பதத்திலிருந்து வருகிறது, வெற்றியைக் குறிக்கும், பசுமை மாலையைக் குறிக்கிறது.

**மேய்ப்பனின் இருதயங்கள்**

நான் சொன்னவைகளெல்லாம் இதைச் சொல்வதற்குத்தான்: மூப்பர்களுக்கு *மேய்ப்பனின் இருதயங்கள் தேவை!* ஆனாலும் மூப்பர்களுக்கு மட்டுமே மேய்ப்பனின் இருதயம் தேவை என்ற தவறான புரிந்துகொள்ளுதலுக்கு நான் இடமளிக்க விரும்பவில்லை. தலைமைத்துவப் பொறுப்பேற்கச் செய்வோராக மேய்ப்பனின் இருதயம் பெறத்தக்கதாக, நம்மில் ஒவ்வொருவரும் அப்படிபட்ட இருதயத்தைப் பெற உற்சாகப்படுத்த வேண்டும்.

யோவான் 21ல் சொல்லப்படும் கதையை சிந்தியுங்கள். இயேசுவை நல்ல மேய்ப்பன் என்று எழுதின யோவான்தான் (யோவான் 10), கீழ்வரும் சம்பவத்தையும் எழுதியுள்ளார், அது கலிலேயா கடலருகில் கிறிஸ்துவின் பூமிக்குரிய முடிவு நேரம் நெருங்குகிற வேளையில் நடந்தது, இயேசு சீஷர்களுக்கும், அவரை மூன்று முறை மறுதலித்த பேதுருவுக்கும் தரிசனமானார். குறிப்பிட்ட ஒரு வேளையில், இயேசு பேதுருவை தனிமையில் அழைத்துக் கொண்டு போய் அவனோடு உரையாடினார்:

> அவர்கள் போஜனம்பண்ணின பின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்?" அதற்கு அவன்: "ஆம் ஆண்டவரே; உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான்." அவர்: "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்றார். இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்றார். அதற்கு அவன்: "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான். அவர்: "என்

> *ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார். மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ என்னை நேசிக்கிறாயா" என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தாரம் தன்னைக் கேட்ட படியினாலே, பேதுரு துக்கப்பட்டு: "ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" என்றான். இயேசு: "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார் (யோவான் 21:15-17).*

*அடிப்படையில் இயேசு மூன்று முறையும் பேதுருவினிடத்தில் ஒரே மாதிரியாகத் தான் கேட்டார், ஆனால் ஒவ்வொருமுறையும் சற்று வித்தியாசமான பதங்களில்கேட்டார். இயேசு முதலாவதாக பேதுருவினிடத்தில், "என் ஆட்டுக்குட்டிகளை கவனித்துக் கொள்"[9] என்று சொன்னார். இரண்டாம் முறை, அவர் "என்ஆடுகளை மேய்ப்பாயாக"[10] என்றார். கடைசியாக, அவர், "என்ஆடுகளை கவனித்துக் கொள்வாயாக" என்றார். பேதுரு இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தார்; அவர் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பனானார் (1 பேதுரு 5:1).*

*இந்த நிகழ்ச்சியில் நம்மெல்லாருக்குமே பாடங்கள் இருக்கின்றன. இதில் வரும் முக்கிய கருத்துக்கள் ஒருவேளை நம்முடைய வாழ்வின் முன்னுரிமைகளுக்கென செயல்படுவதே. நாம் மேய்ப்பனின் இருதயமுடைவர்களாயிருக்க பிரயாசப்படுகிறோமா? ஜனங்களின் தேவையறிந்து அதற்கென அக்கறை காட்டுகிறோமா? இயேசு தமது கைகளை நமது தோள் மீது வைத்து, பேதுருவிடத்தில் பேசினது போல நம்மிடத்திலும் பேசுவதாக கற்பனை செய்து பாருங்கள்:*

- *"நீ என்னை அன்புகூருகிறாயா, உண்மையாகவே அன்புகூருகிறாயா?"*
- *"நீ உண்மையாகவே இவைகளை (நமது வாழ்க்கையை ஆட் கொண்டுள்ள எல்லாவற்றையும்) காட்டிலும் அதிகமாக என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?"*
- *"அப்படியானால் என் ஆட்டுக்குட்டிகளை கவனித்துக்கொள்; என் ஆடுகளை மேய்ப்பாயாக; நான் அன்புகூருகிறவர்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்."*

ஒவ்வொரு பெற்றோரும் இந்தப் பாடத்தை இருதயத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது பராமரிப்பில் விலையேறப்பட்ட ஆத்துமாக்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார். நாம் அவர்களிடத்தில் அன்புகூர்ந்து, கவனம் செலுத்தி, பாதுகாக்க வேண்டும். நாம் எல்லாருமே இந்தப் பாடத்தை இருதயத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். மந்தையின் அங்கத்தினர்கள் திக்கற்றுத் திரிந்திருக்கலாம். *மேய்ப்பர்கள் எங்கே?* ஆம், இது மூப்பர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் தான், ஆகிலும் இதை நம்மிலே ஒவ்வொருவருக்கும் பயன்படுத்த விரும்புகிறேன். மேய்ப்பனின் இருதயம் பெற்று, அலைந்து திரியும் ஆடுகளைக் கண்டுபிடித்து திரும்பவும் மந்தையில் கொண்டுவந்து சேர்க்கத்தக்கவர்கள் எங்கே (காண்க கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:19, 20)?

## முடிவுரை

ஆடு மற்றும் மேய்ப்பர்களைக் குறித்த இந்த வேதாகம போதனை, அன்பு

காட்டும் தலைமத்துவத்தின் தேவை, அதின் தாக்கமாக, நாம் ஒவ்வொருவரும், செயல்விளைவில் மற்றவர்களுக்கு “மேய்ப்பராக” இருக்க வேண்டும் என்ற தேவை போன்ற பாடங்கள் என்பது நம்மில் எல்லோருக்குமே அவசியமானது. இந்தப் பாடத்தை நிறைவுசெய்கிற இந்த வேளையில், வரவிருக்கிற மூப்பர்கள் தேர்வில் இதை ஒருமுகப்படுத்துவோம். தகுதியானவர்களைத் தேடும்போது, மேய்ப்பனின் இருதயங்களை கொண்டிருப்பவர்களைக் காண்பதில் தவறாதிருப்போமாக.

## குறிப்புகள்

இந்த பிரசங்கத்தை மூப்பர்களை தெரிவு செய்து ஏற்படுத்தும் நேரத்தை அணுகும்போது தேவன் நம்மோடு இருக்கும்படியான ஜெபத்துடன் உங்கள் முன் வைக்கிறேன். தேவனுடைய மந்தையாகிய சபையில் பங்கு வகிக்க வேண்டியதன் அவசியத்தை மையப்படுத்தி, எனது அழைப்பை விடுக்கிறேன் (நடபடிகள் 2:36-38, 41, 47ஐக் காண்க).

மேய்ப்பனைக் குறித்தும் ஆட்டைக் குறித்தும் வேதாகமம் சொல்லுவதை ஆராய்வது எனக்கு மகிழ்ச்சியான அனுபவத்தைக் கொடுத்தது. நான் இந்த பாடத்தை சில மூலத்தகவல்கள் மூலம் பெற்றேன், அவைகளை இப்பொழுது மறந்து விட்டேன் என்பதில் ஐயமில்லை. யாருக்கு கௌரவத்தைக் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்கு கௌரவத்தை செலுத்தத் தவறியிருந்தால் நான் மன்னிப்புக் கோருகிறேன்; ஆனால் முக்கியமாக ஒத்தவாக்கிய அகராதியைப் பயன்படுத்தி இந்த பாடத்தை விரிவுபடுத்தினேன். ஒரே பிரசங்கத்தில் செய்து முடிக்க இயலாத அளவுக்கு மிக அதிகமான தகவல்கள் இதிலே காணக்கிடக்கிறது, ஆனாலும் அவைகளெல்லாவற்றையும் இப்பாடத்தில் சேர்த்திருக்கிறேன், அதினால் நீங்கள் ஊழியம் செய்கிற உங்கள் உள்ளூர் சபையில் சூழ்நிலைக்கு ஏற்பமிகமுக்கியமாக பொருந்துகிற கருத்துக்களை தெரிவு செய்துகொள்ளக்கூடும்.

ஒரு ஆராய்ச்சிக்குப் பதிலாக, நீங்கள் ஒரு தனி வசனப்பகுதி மேய்ப்பரைக் குறித்து பேசுவதை தியானம் பண்ணலாம். எசேக்கியேல் 34 இதற்கு மிகவும் சிறப்பான வசனப்பகுதி.

---

குறிப்புகள்

[1]பிற ஒத்த வசனங்கள் சகரியா 9:16; 10:3, யும் உட்படுத்தியது. [2]காண்க ஏசாயா 56:11. [3]மற்றொரு வசனம் எரேமியா 25:34. [4] KJV யில் “ஆளுபவன்” என்றுள்ளது (“நடத்துகிறவன்”) ஆனால் கிரேக்க மொழியில் வினைச்சொல்லாக, “மேய்ப்பன்” என்பதற்கு பாய்மன் என்று உள்ளது. [5]இயேசு நம்முடைய மேய்ப்பன் என்பதை பல மடங்காகச் சொல்லலாம், கிறிஸ்து தமது மரணத்திற்கு சிறிது நேரத்துக்கு முன்பாகத்தான், சகரியா 13:7ஐக் குறிப்பிட்டார். அதில் மேய்ப்பனை (இயேசுதாமே) வெட்டுவேன், ஆடுகள் (அவரது சீஷர்கள்) சிதறடிக்கப்படும் என்று குறிப்பிடப்படுகிறது (மத்தேயு 26:31; மாற்கு 14:27). [6]“வேறே ஆடுகள்” என்பது புறஜாதிகளை குறிப்பிடுகிறது. [7]சங்கீதம் 2:9 வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்று முறை இயேசுவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (2:27; 12:5; 19:15), இவைகளில் இயேசு “இருப்புக்கோலால் ஆளுகை செய்வார் ...” என்று கூறப்பட்டது. இங்கு “ஆளுகை” எனும் பதம் கிரேக்க வினைச்சொல் பாய்மன் என்பதிலிருந்து

மொழிபெயர்க்கப்பட்டபடி "மேய்ப்பன்" என்றே பொருள்படும். [8]KJV யில் "போஷித்தல்" என்றுள்ளது. அது மேய்ப்பர்களின் பொறுப்புகளில் ஒன்று, [9]KJV மொழிபெயர்ப்பில் "போஷித்தல்" என்று ஒவ்வொரு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் கிரேக்க வார்த்தையில் இரண்டு வித்தியாசப்பட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசுவின் மூன்று அறிவுறுதல்களிலுமே பேதுருவிடம் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் முறை, "மேய்ப்பாயாக" என்பது புதிய அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் திருமறையில், பாய்மன் என்று வினைச்சொல்லாகப்பயன்படுத்தப்பட்டுள்ளது. [10]"ஆடு" என்பதற்கு வழக்கமாக பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தை புரோபேட்டன். இயேசு புரோபேட்டன் எனும்பதத்தை மிகச் சிறிய அளவிலேயே பயன்படுத்தினார். புரோபேசன் என்பது, "சிறிய ஆடு" என்றால் அன்பின் அடிப்படையில் குறிப்பிடப்படுவது. (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 569.)